**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**முதலாம் ஆண்டு – முதற் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர், திசம்பர் – 2014**

**P201 மொழிபெயர்ப்பியல்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. கருத்துப் பரிமாற்றத்தின் சிறந்த ஊடகமாக அமைவது எது?
2. விவிலியம் எந்த நூற்றாண்டில் முதன்முதலில் தமிழில் மொழியாக்கம் ஆனது?
3. மெகஸ்தனிஸ் எனும் மொழிபெயர்ப்பு நூலின் ஆசிரியர் யார்?
4. உயிரோட்டமுள்ள மொழிபெயர்ப்பில் முதலிடம் பெறுவது எது?
5. Transcreation என்னும் சொல்லின் மொழிபெயர்ப்பு எது?
6. ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கும்போது ஆங்கிலம் எம்மொழியாகிறது?
7. 'பாஞ்சாலி சபதம்' எழுதியவர் யார்?
8. தமிழ் மொழிபெயர்ப்புத் தந்தை என்று போற்றப்படுபவர் யார்?
9. அரிஸ்டாட்டிலின் கவிதையியலைத் தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?

10. 'செம்மீன்' எந்த மொழியிலிருந்து, தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டது?
11. பாண்டிய நாட்டிலிருந்து, யவனர் தம் நாட்டிற்கு எதனை எடுத்துச் சென்றனர்?
12. தமிழில் மந்தி என்ற சொல் உணர்த்தும் பொருள் எது?
13. தமிழில் எந்த நூற்றாண்டில் அகராதிகள் வழக்கில் வந்தன?
14. நிகண்டுகளின் அடிப்படைத் தன்மை எது?
15. Hurricane என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல் எது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. வாசகர்களின் மூன்றுவித மொழிபெயர்ப்புத் தேவைகள் எவை?
2. சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் குறித்து எழுதுக.
3. மொழிபெயர்ப்பில் பெயர்களை மாற்றுவது முறையா? விளக்குக.
4. மொழிபெயர்ப்பில் தன்வயமாக்கல் என்றால் என்ன?
5. Translation, Transcreation இவற்றின் வேறுபாடுகளை விளக்குக.
6. திரைப்பட இதழ்கள் குறித்து எழுதுக.
7. 'எமிலி ஜோலா' பற்றி அண்ணா எழுதிய உணர்ச்சிகரமான சொற்கள் யாவை?
8. விடுகதைகள், சிலேடை போன்றவற்றை மொழிபெயர்க்க இயலாது– ஏன்?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) சொல்லாக்கத்தில் மொழியியல் அறிஞர் பாவாணரின் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழில் காலந்தோறும் ஆட்சி புரிந்த பல்வேறு அரசுகளுக்கு ஏற்ப, ஆட்சிமொழியான தமிழில் ஏற்பட்ட மாற்றங்களைச் சான்றுகளுடன் விளக்குக.

2. (அ) கிறித்தவ சமய இலக்கிய மொழிபெயர்ப்புக்களைப் பற்றி ஒரு கட்டுரையாக்குக.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பாகத் தமிழுக்கு வந்த புதினம், நாடகம் ஆகிய இலக்கிய வகைகள் பற்றி விளக்கி வரைக.

3. (அ) மொழிபெயர்ப்பின் தோற்றம், வளர்ச்சி குறித்து விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்புக் கலையாக்கம், மொழிபெயர்க்கும் முறை – இவை குறித்து விளக்கமாக எழுதுக.